பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

21 08 2025 THURSDAY 12 40 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவை இன்று மறுதேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டது.
2. குடியரசு துணைத்தலைவர் தேர்தலில், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வேட்பாளராக போட்டியிடும் திரு. சுதர்ஸன் ரெட்டி இன்று வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

3. தீபாவளி, சத் பூஜையை முன்னிட்டு 12 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் அறிவித்துள்ளார்.

4. பெண் குழந்தைகளை காப்போம் - கல்வி கற்பிப்போம் திட்டத்திற்காக தமிழகத்திற்கு 10 கோடியே 40 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது

5. Europe Smash டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manav Thakkar – Manush Shah இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

மக்களவை இன்று மறுதேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர், கடந்த மாதம் 21ஆம் தேதி தொடங்கியதிலிருந்தே பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்பி, எதிர்க்கட்சிகள் தொடர் அமளியில் ஈடுபட்டு வந்தன.

இதன் காரணமாக, நாடாளுமன்ற இரு அவைகளின் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன.

கடைசி நாளான இன்றும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால், முதலில் நண்பகல் வரை ஒத்தி வைக்கப்பட்ட மக்களவை, பின்னர் மறுதேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

மாநிலங்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மழைக்கால கூட்டத்தொடரில், எதிர்க்கட்சிகளின் தொடர் அமளிக்கிடையே, இரு அவைகளிலும் ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்த சிறப்பு விவாதம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தொடரின் போது, மக்களவையில் 12 மசோதாக்களும், மாநிலங்களவையில் 14 மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

>>>>><<<<<

குடியரசு துணைத்தலைவர் தேர்தலில், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வேட்பாளராக போட்டியிடும் திரு. சுதர்ஸன் ரெட்டி இன்று வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியின் மூத்த தலைவர் திருமதி. சோனியா காந்தி மற்றும் திரு. சரத்பவார். திரு. திருச்சி சிவா உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் மனு தாக்கலின் போது உடனிருந்தனர்.

இத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடையும் நிலையில், மனுக்கள் மீதான பரிசீலனை நாளை மேற்கொள்ளப்படுகிறது.

>>>>><<<<<

தீபாவளி மற்றும் சத் பூஜையை முன்னிட்டு, 12 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் அறிவித்துள்ளார்.

புதுதில்லியில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர்களுடன் நடத்திய ஆலோசனைக்குப் பிறகு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த ஆலோசனையின் போது, பீகார் மக்களின் தேவைகளை கேட்டறிந்ததாகவும், அதற்கேற்ப புதிய ரயில்கள் இயக்கப்படுவதுடன், கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தில்லியிலிருந்து கயா, சகர்ஸா, சாப்ரா மற்றும் அம்ரித்சரஸ் நகரங்களுக்கு 4 புதிய அம்ரித் பாரத் ரயில்கள் இயக்கப்படுவதுடன், முஸாபர்பூர் மற்றும் ஹைதராபாத் நகரங்களுக்கும் ரயில்கள் இயக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பண்டிகைகள் முடிந்து, திரும்பி வருவதற்கான டிக்கெட்டுகளையும் சேர்த்து முன்பதிவு செய்வோருக்கு புதிய விதிமுறைகளின் அடிப்படையில் 20 சதவீத கட்டணச் சலுகை அளிக்கப்படும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

>>>>><<<<<

பெண் குழந்தைகளை காப்போம், அவர்களுக்கு கல்வி கற்பிப்போம் திட்டத்திற்காக தமிழகத்திற்கு 10 கோடியே 40 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி. சாவித்ரி தாக்கூர் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், குழந்தைகள் பாலின விகிதத்தை அதிகரித்து, சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்காக கொண்டு வரப்பட்ட இந்த திட்டத்தின் கீழ், ராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை உள்ளிட்ட 6 மாவட்டங்களுக்கு தலா 40 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இதேபோன்று, பெரம்பலூர், ராமநாதபுரம், தருமபுரி, நீலகிரி உள்ளிட்ட 18 மாவட்டங்களுக்கு தலா 30 லட்சம் ரூபாயும், வேலூர், விழுப்புரம், சென்னை உள்ளிட்ட 13 மாவட்டங்களுக்கு தலா 20 லட்சம் ரூபாயும் வழங்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் பலனாக, தமிழகத்தில் பள்ளிகளில் சேரும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை 98 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் திருமதி. சாவித்ரி தாக்கூர் கூறியுள்ளார்.

>>>>><<<<<

இந்தியா – யுரேஷியா நாடுகளுக்கு இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தத்திற்கான பேச்சுவார்த்தைகளை தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

யுரேஷிய பொருளாதார யூனியன் அமைப்புக்கு உட்பட்ட அர்மேனியா, பெலாரஸ், கஸகஸ்தான், கிர்கிஸ்தான் மற்றும் ரஷ்யாவுடன் இந்த பேச்சுவார்த்தையை மேற்கொள்ளும் வகையில், அதற்கான நெறிமுறைகளில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

மாஸ்கோவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய வர்த்தக அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் திரு. Ajay Bhadoo, யுரேஷிய பொருளாதார ஆணையத்தின் வர்த்தகப் பிரிவு துணை இயக்குநர் திரு. Mikhail Cherekaev ஆகியோர் இதில் கையெழுத்திட்டனர்.

இந்த நடவடிக்கை ஏற்றுமதியை ஊக்குவிப்பதுடன் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உறுதுணையாக இருப்பதோடு, சந்தைகளை எளிதில் அணுகுவதற்கும் உதவிகரமாக இருக்கும் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மத்திய அரசு அலுவலகங்களில், நிலுவையில் உள்ள கோப்புகளின் எண்ணிக்கையை குறைத்து, தூய்மையை பராமரிக்க ஏதுவாக, தூய்மைக்கான 5ஆம் கட்ட சிறப்பு இயக்கம்

செயல்படுத்தப்படவுள்ளதாக மத்திய நிர்வாக சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்பு துறை தெரிவித்துள்ளது.

வரும் அக்டோபர் 2ஆம் தேதி முதல் 31ஆம் தேதிவரை மத்திய அரசின் அனைத்து அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் இந்த இயக்கம் செயல்படுத்தப்படவுள்ளது.

இதுதொடர்பாக, நிர்வாக சீர்திருத்தத்துறை செயலாளர் திரு. சீனிவாஸ், அனைத்து துறை செயலாளர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதன்படி, சிறப்பு இயக்கத்தின் ஆயத்தப் பணிகள், அடுத்த மாதம் 15ஆம் தேதி முதல் 30ஆம் தேதிவரை மேற்கொள்ளப்படும்.

அக்டோபர் மாதத்தில் இந்தப் பணிகள் செயல்படுத்தப்பட்டு, நவம்பர் மாதத்தில் இந்தப் பணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு, சிறந்த நடைமுறைகள் டிசம்பர் மாதத்தில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஆன்லைன் விளையாட்டுகளை முறைப்படுத்தும் வகையில், புதிய ஆன்லைன் விளையாட்டு மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த மசோதா, ஆன்லைன் விளையாட்டுகளால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் என்று தமிழகத்தின் கோவையைச் சேர்ந்த நுகர்வோர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திரு. ஜெயராமன் தெரிவித்தார்.

>>>>><<<<<

ஆதார் அடிப்படையிலான வாடிக்கையாளர் சரிபார்ப்பு சேவைகளை, தடையின்றி வழங்குவதை உறுதி செய்ய இந்திய தனித்துவ அடையாள ஆணையம், தனியார் இணையதள சேவை நிறுவனமான Starlink-குடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்த நடவடிக்கை டிஜிட்டல் கட்டமைப்பு வசதியை மேம்படுத்துவதில், இந்தியாவின் செயல்பாடு மற்றும் நம்பகத்தன்மையை எடுத்துக்காட்டுவதாக இருக்கும் என்று மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

இந்தியாவுடனான நட்புறவை மேம்படுத்த வேண்டியது அவசியம் என்று ஐ.நாவுக்கான அமெரிக்க முன்னாள் தூதர் திருமதி. Nikki Haley வலியுறுத்தியுள்ளார்.

பத்திரிகை ஒன்றில் அவர் எழுதியுள்ள கட்டுரையில், ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வதால், இந்தியாவிற்கு கூடுதல் வரி விதிக்கப்பட்டதன் காரணமாக, இருதரப்பு உறவு பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற கூடுதல் வரிவிதிப்புகள் மற்றும் இந்தியா-பாகிஸ்தான் பிரச்சினையில் அமெரிக்காவின் தலையீடு தொடர்வதை அனுமதிக்கக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவையும், சீனாவையும் ஒரே மாதிரியாக கருதுவதும் சரியானதாக இருக்காது என்று அவர் கூறியுள்ளார்.

உலகின் நான்காவது பெரிய பொருளாதார நாடாக உள்ள இந்தியாவுக்கு கூடுதல் வரி விதிப்பது, எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும் என்றும் திருமதி. Nikki Haley எச்சரித்துள்ளார்.

>>>>><<<<<

Europe Smash டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manav Thakkar – Manush Shah இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஸ்வீடனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இந்த இணை, 9-11. 11-4, 11-5, 11-6 என்ற செட்கணக்கில் போலந்தின் Milos Redzimski – Maciej Kubik இணையை வென்றது.

>>>>><<<<<

ஹைதராபாதில் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Rounak Chouhan காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-12, 21-16 என்ற செட்கணக்கில் பிரணவ் மஞ்சுநாத்தை வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில்  மொஹமது – Devanaboina இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

துனிஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sreemanya Reddy – Janani Ramesh இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 6-1 என்ற செட்கணக்கில் அல்ஜீரியாவின் Farah – துனிஷியாவின் Lina இணையை வென்றது.

>>>>>end<<<<<